ஐ.நா.சபை ஆதிக்கவெறியரின் பாசறையாகிறது!

உலக சமாதானத்துக்கு உலைவைக்கிறது அமெரிக்கா

அமைதியை காக்கவேண்டிய பாதுகாப்பு சபை அமைதியைக் குலைக்கிறது

அமெரிக்கபடைகள் வெளியேறினாலன்றி அமைதிக்கு வழியில்லை

ஐ. நா.வுக்கும் அமெரிக்காவுக்கு தோழர் கிராமிகோ சாட்டை

'ஐ. நா. பாதுகாப்பு கவுன்சில் கொரியாப்போரில் தலையிட முடிவு செய்தது, சட்டவிரோதமானதாகும் பாதுகாப்பு கவுன்சில் அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்புடைய சபையாக நடந்து கொள்ளவில்லை. அதற்கு மாறாக, யுனைடெட் ஸ்டேட்சின் ஆளும் வர்க்கத்தின் கருவியாக இருந்து, அமைதியைக் குலைக்கும் சபையாகவே இருக்கிறது" என்று, அமெரிக்க வெளிநாட்டமைச்சர்களில் முதல்வரான தோழர் கிராமிகோ குறிப்பிட்டார்.

கொரியாப் போர்பற்றி தனது கருத்தைவெளியிடுகையில் தோழர் கிராமிகோ மேற்கண்டவாறு கூறினர் அவர் மேலும்கூறியதாவது:—

அமெரிக்க அரசாங்கம் கொஞ்சங் கொஞ்சமாக நாட்டை வெளிப்படையான போருக்குத் தயார்செய்து கொண்டு வருகிறது.

ஜூன் மாதம் 27-ம் தேதி ஐ.நா. பாதுகாப்புசபை,கொரியாப் போர் பற்றி செய்திருக்கும் தீர்மானம், அமைதியை அழிப்பதாகவே யிருக்கிறது. மேலும், அதே நாளில் போர்மோசா பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், இந்தோசீனாவில் இராணுவ பலம் அதிகரிக்க வேண்டுமென்றும் ட்ருமன் உத்தரவிட்டதும் குழம்புத்தனமாகும்.

கொரியாவிலிருந்து, அமெரிக்கத் துருப்புகளை யெல்லாம் வெளியேற்றும் முயற்சியை உடனே ஐ. நா. பாதுகாப்பு சபை செய்யாதவரை ஐ. நா. சபை அமைந்தய நிலை நாட்டும் அதன் குறிக்கோளை அடைய முடியாது.

போர் ஆரம்பத்தில் தென்கொரியாப் படைகள்,போராட முடியாத நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் இடையிலே புகுந்து, படைகளை உதவி தென் கொரியாவை மேலும் போரில் ஈடுபடுத்த முயன்றதிலிருந்துதான், அமைதியின் விரோதி என்பதைதானேகாட்டிக்கொண்டு விட்டது அமெரிக்கா.

கொரியாவில், அமெரிக்கப் படைகள் புகுந்திருப்பது கொரிய மக்கள் மீது அமெரிக்கா போர் தொடுத்துவிட்டதுஎன்பதையே காட்டுவதாகும்.

இங்ஙனம், பலாத்காரத்தின் மூலம் கொரியாவின் சுதந்திரத்தைப் பறித்து, கொரியாவில் தன்னுடைய காலனி ஆட்சியை நிலைபெறச் செய்து அதன் மூலம் தூரக்கிழக்கு நாடுகளைப் பிடிக்ககொரியாவை தக்கதோர் இராணுவ தளமாகச் செய்வதே அமெரிக்க ஆ[illegible]

வர்க்கத்தின் அந்தரங்கநோக்கமாகும்.

உலக சமாதானத்தை நிலைநாட்டும் விஷயத்தில் ரஷியாவின் கொள்கையில் இதுவரையும் எவ்வித மாற்றமும் இல்லை. அந்தந்த நாடுகளின் கலாசாரங்களிலும் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடுவதில்லை என்பதே ரஷியாவின் கொள்கை. இதனை என்றும்போல் இன்றும் கடைப்பிடித்து வருகிறது ரஷியா இப்படியிருக்க. கொரியாவின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்காதலையிடுவது அநீதியாகும்.

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது, தென்பகுதி பாலதாக்கப்பட்ட வடபகுதியினர் தற்காப்பு செய்துகொள்வதோடு நில்லாமல் துருப்புகளை அனுப்பி, தோட்ட முதலாளிகளின் படைகளைத் தாக்கி, அங்கு அடிமை வாழ்வில் உழன்று கொண்டிருந்த எளிய மக்களை மீட்டனர் இப்படிச் செய்ததன் மூலம் அங்கு தேசிய ஒற்றுமை ஏற்பட வழி செய்யப்பட்டது" என்று கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் ரஷியாவில் தோன்றிய அக்டோபர் புரட்சியையும் நினைவுபடுத்தி, அதில் பிரிட்டனும் பிரான்சும ஜார் ஆட்சியாளருக்குப்பக்கத்துணையாயிருந்து சோவியத் நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டதையும் குறிப்பிட்டார். அத்துடன் சோவியத் அரசாங்கம் அந்நிய நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பதையும் விளக்கினுர். மேலும் கொரியாவிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேறச் செய்வதே அமைதிக்கு வழி என்றுஐ.நா. பாது காப்புக் கவுன்சிலுக்கு அறிவுறுத்தகிறுர்.

சிங்கப்பூருக்கு ஜப்பானிய பிர

சிங்கப்பூர், ஜூலை. 5—

யுத்தத்திற்குப் பிறகு முதல் முதலாக ஜ[illegible] பிர், சிங்கப்பூரில் இறக்குமதி[illegible]ட்டிருக்கிறது இதன் வி[illegible]ம் நிரூபிக்கப்பட்டவில்லை. [illegible] பீரை விட இதன் வி[illegible]வாகவே இருக்குமா[illegible]குமோம்

Phone No 4502

கிலை அரை அணை

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர். C.N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 ‖ சென்னை (6—7—50) வெளியூர் (7—7—50) ‖ இதழ் 297

மஞ்சூரியாவில் சீன கம்யூனிஸ்டு துருப்புகள் குவிகின்றன

............(—)............

போர்மோசாவைத் தாக்கும் திட்டம் தளரவில்லை

லண்டன், ஜூலை 5—

பல முனைகளில் சீன கம்யூனிஸ்டு துருப்புகள் குவிவதாக போர்மோஸவிலிருந்து இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

கொரியாவை ஒட்டினர்போல உள்ள மஞ்சூரியாவில், சீன கம்யூனிஸ்டு படைகள் ஒன்றுசேர்ந்திருப்பதாக அச் செய்தி கூறுகிறது.

வடசீனாவிலிருந்துஜெனரல் நை யங் சாங் என்பவர் தலைமையி[illegible]செஞ்சேனப்படை மஞ்சூரியா சென்றிருப்பதாக கூறப்படுகிறது.

இந்தோசீன எல்லைக்கருகிலும் சீன கம்யூனிஸ்ட் துருப்புகள் குவிக்கப்படுகின்றனவென்று இதே செய்தி கூறுகிறது.

ஹாங்காங் எல்லைகளில் உள்ள சீனகம்யூனிஸ்டு துருப்புகளின் எண்ணிக்கை, சுமார் 40,000என்று கூறப்படுகிறது.

போர்மோசாவைத்தாக்குவதற்காக சீன கம்யூனிஸ்டுகள் செய்துவரும் ஏற்பாடுகளிலும், தளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை என்று தெரியவில்லை

காந்தியார் கணக்கில்..?

சென்னை, ஜூலை 5—

காந்திஜி ஞாபகார்த்த நிதி ரசீது புத்தகங்களைத் தபால் கட்டணம் ரிஜிஸ்திரேஷன் கட்டணம்,எதுவும் இல்லாமல் தபாலில் அனுப்பலாமென்று, 1948 ஏப்ரல் 19ந்தேதி தபால் இலாகா அறிக்கை அறிவித்திருந்தது. இந்தச் சலுகை ஜூலை 1-ந்தேதி முதல் ரத்து செய்யப்பட்டு விட்டதாக, இந்திய சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

'எக்ஸ்பிரஸ் போஸ்டல் டெலிவரி'

சென்னை, ஜூலை 5—

ஞாயிறன்று தபால்களை எக்ஸ்பிரஸ் டெலிவரி மூலம் பட்டுவாடா செய்வது, சுமார் 50 இடங்களிலேயே அமுல் செய்யப்பட்டு வருகிறது. இதை, இன்னும் தென்னிந்தியாவில் 150 இடங்களுக்கு விஸ்தரிக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. இது சம்பந்தமான அறிக்கை சீக்கிரமே எதிர்பார்க்கப்படுகிறது.

மலேயாவுக்கு முஸ்லிம் காலேஜ்

சிங்கப்பூர், ஜூலை 5—

மலேயாவில், ஒரு முஸ்லிம் காலேஜ் ஏற்படுத்த வேண்டும் என்கிற விஷயம் பற்றி, குவாலாலம்பூரில் நடைபெறவிருக்கும் மாநாடு ஒன்றில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

பிடிபட்ட ஸியோலில் ரஷ்ய ஆட்சி முறை

————(0)————

கம்யூனிச பிரசாரமும் கனவேகமாக நடக்கிறது

டோகியோ, ஜூலை 5—

தென் கொரியா தலைநகராக இருந்து வடகொரியர்கள் வசமான ஸியோலில் உடனடியாக ரஷ்ய முறை நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு விட்டதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்டுப்பிரசாரம் செய்வதற்காகவென்றே 1000 கொரியர்கள் விசேஷப் பயிற்சி பெற்று பிரசாரத்தை தென் கொரியர்களிடையே நடத்தி வருகின்றனர்.

வட கொரிய டிவிஷன்களில் சில, மாசேதுங்கின் சீனகம்யூனிஸ்டுப் படைகளுடன் பயிற்சி பெற்றவை என்று நினைப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

தென்னாப்ரிக்க இந்தியர்களை தொல்லை தொடருகிறது

————(:0:)————

சண்டன நாளன்று வேலைக்குவராதோர் வெளியேற்றப்படலாம்

..........(:—:)..........

டர்பன் மேயர் கெடுபிடி

டர்பன், ஜூலை 5—

நிறவெறிக் கொள்கையைக் கண்டித்து அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் தினத்தன்று, டர்பன் முனிசிபல் சர்விஸிலுள்ள இந்தியர்கள் கலந்து கொண்டு வேலைக்குவரவில்லை. இவர்களை, வேலையிலிருந்து [illegible]விட்டே மறு வேலைபார்க்க போவதாகவும், இவர்கள் [illegible]தானத்திற்குச் சுதேசிகளை வேலைக்கு வைக்கப்போவதாகவும் டர்பன் மேயர் கெடு[illegible]

[illegible]ளைக் கூறுகிறுர்.

இந்தியர் செல்வாக்கு இருக்கும்படியாக விடப்போவதில்லை என்று, அவர் கொக்கரிக்கிறுர்.

அன்று வேலைக்கு வராத இந்தியர்களை, வேலையிலிருந்து நீக்கிவிடுவதென்று டர்பன் நகரசபை தீர்மானித்திருக்கிறது.

இந்தியர் [illegible]ப்பிரிக்காவின் கிழக்குக் [illegible]யில் தங்களு[illegible]டைய ஆ[illegible]கத்தை [illegible] முயற்சித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவந்ததாகவும், இது ஒரு நீண்டகால திட்டம் என்றும், இதில் டர்பனும் சேர்க்கப்பட்டிருப்பதா[illegible] தெரியவருகிறதாகவும் [illegible] இந்தியர் செல்வாக்கு [illegible]னில இடம்பெறவிடமாட்டாது என்றும் டர்ப[illegible] கூறுகிறுர்.

இந்தியர்கள் டிஸ்[illegible] பப்பட்டால் ஏற்கனவே [illegible]களிடையேயுள்ள [illegible]வாத் திண்டாட்டம் அதிகரிக்கும், இ[illegible] 800[illegible] பேர் வேலை [illegible]கின்றனராம்.

மாலை மணி

...ன 6—7—50 வியாழக்கிழமை

...ண்குருடா ? :: கருத்துக்குருடா ?

"திராவிட நாடு திராவிடர்க்கே"—என்பது நமது 'தாரக மந்திரம்', இலட்சியகீதம் !

அந்த இலட்சிய கீதத்தின் விளக்கத்தைத் திராவிட இயக்கத்தினராகிய நாம், சென்ற பத்து ஆண்டுகாலமாக, நாட்டவர்க்கு நல்ல முறையில் எடுத்துக் கூறி வருகிறோம்.

அரசியல் - பொருளாதாரம் சமுதாயம் ஆகிய துறைகளில், திராவிடம் விடுதலை பெற்றுத் தனிநாடாக விளங்கவேண்டும் என்பதுதான் நமது ஆவல். உலகிலுள்ள பல்வேறு நாடுகளும், அந்த ஆவலை நமக்கு அளிக்கும் வகையில் தான், தனித்தனியாகச்சொந்த ஆட்சி நடத்தி வருகின்றன.

திராவிடம், இன்றைய நிலையில் அரசியல் துறையிலே வடநாட்டு ஆணவத்திற்கும், பொருளாதாரத்திலே வடநாட்டுப் பனியாக்களுக்கும், சமுதாயத்திலே வடநாட்டிலிருந்து வந்த ஆரியத்திற்கும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. அந்த அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து, திராவிடத்தை விடுதலைபெறச் செய்ய வேண்டும் என்ற சீரிய பணியில்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஈடுபட்டுள்ளனர். அரசியல் துறையிலே இன்று நிலவிவரும் வடநாட்டு, பாசீச, சுரண்டல், ஏகாதிபத்திய பட்டேலிச ஆட்சியை அகற்றி, புரட்சி மணங்கமழும் சுதந்திர சோஷலிசக் குடியரசாட்சியை நிறுவ வேண்டும் என்பதும், பொருளாதாரத்துறையிலே இருந்து வரும் வடநாட்டுப்பனியா—பட்டாணி—மூல்தானி—மார்வாடி-குஜராத்தி ஆகியோரின் சுரண்டலையும், பொதுவாக உள்நாட்டு வெளிநாட்டு முதலாளித்வச் சுரண்டலையும் போக்கி, சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி, சொந்த நாட்டின் முழு வளத்தைக்கொண்டு நிலைநாட்டப்படவேண்டும், என்பதும், சமுதாயத்துறையிலே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆரியம் கற்பித்துவந்த, பிறப்பினால் பேதம் உண்டு என்ற பாழ்பட்டக் கொள்கையை அடியோடு பொசுக்கி மனிதனை மனிதனென்று, மனிதரெல்லோரும் நினைக்கும்படி செய்ய வேண்டும் என்பதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ...இயக்கூறுபாடுகளாக ...வருகின்றன. இந்த ...களை, உரியமுறை ...ற்றச் செய்யவே, ...நாட்டுப் பிரிவினை ...க நிமிர்ந்து நின்று ...றுகிறது.

இன்... ...ந்துக்களையெல் ...பெ...ாள்ள வாய்ப் ...ல்லை ...னாலோ, அல்லது புரிந்துகொள்ள முடியாத தன்மையாலோ, அல்லது வடநாட்டவரிக்கு அடிமையான தன்மையிலிருந்து மீள முடியாத காரணத்தாலோ, அல்லது இப்பொழுது கிடைத்திருக்கும் அற்ப வாழ்வும் அற்றுவிடும் என்ற காரணத்தாலோ காமராஜர்களும், மாதவமேனன்களும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்—கேலி பேசுகின்றனர்—கிண்டல் செய்கின்றனர். சில நேரங்களில் சித்தம் குழம்பியும் பேசுகின்றனர்.

தோழர் மாதவ மேனன் அண்மையில் குறிப்பிட்டார், 'திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டும் என்போர், பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்' என்று. ஆனால், உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் வரலாற்றையும் துருவித்துருவி ஆராய்ந்து, அவற்றைக் கேட்டால், அவை நிச்சயம் சொல்லும்பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இடம்பெறவேண்டியவர், தோழர் மாதவமேனன்தான் என்று! மற்றும் அவருடைய அமைச்சு வேலைகளை அன்றாடம் கவனித்து வந்தால், பைத்தியத்திற்கும் மாதவமேனனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம்! அந்தப் 'பைத்திய நண்பனின்' தொடர்பு அதிகம் ஏற்பட்டுவிட்டக் காரணத்தாலோ என்னவோ, உலக வரலாற்றையும் மறந்து உலக நிலநூலறிவையும் மறந்து ஏதேதோ புலம்பியுள்ளார், திராவிட நாட்டுப் பிரிவினை பற்றி!

திராவிட நாடு, ஒரு காலத்திலே தனித்து வாழ்ந்த நாடு. இன்றும் வாழக்கூடிய நாடு—ஆறுகோடி மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அகன்று விரிந்த நாடு. ஆனால், இந்த அளவைவிட மிகமிகச் சிறியனவாய், ஒரு கோடி மக்களுக்கும் மிகக் குறைந்த மக்களை உடையனவாய் எத்தனையோ நாடுகள் ஐரோப்பாவிலும், பிற கண்டங்களிலும் இருக்கின்றன, அந்நாட்டவரெல்லாரும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இல்லையே! ஒரு கோடி மக்களுக்குக் குறைவாக உடைய இலங்கை, தென்பெருங்கடலில் இந்தியத் துணைக்கண்டத்தை ஒட்டித் தனி நாடாக இலங்குகின்றதே! ஐரோப்பாவில் போர்ச்சுகல், ஸ்பெயின், பிரான்ஸ், டென்மார்க், ஸ்விட்சர்லாண்ட், ஆஸ்திரியா, ருமேனியா, லுதுவேனியா, லட்வியா போன்ற எத்தனையோ சின்னஞ்சிறு நாடுகள், தனித்தனி நாடுகளாகப் பிரிந்துகிடக்கின்றனவே, பத்துகோடி மக்களைக் கொண்ட பாக்கிஸ்தான், தனி நாடாகக் காட்சியளிக்கிறதே! இவைகளெல்லா... தோழர் மாதவமேனன் கண்களில் படாமல் போவானேன்! அவர் கூற்றுப்படி அந்நாடுகளிலுள்ளவர் களெல்லோரும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில் வாசம் செய்யவில்லையே! நல்ல நிலையில்தானே வாழ்கிறார்கள்! காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகவிளங்குவது போல், தோழர் மாதவமேனனுக்கு நாட்டுப்பிரிவினை வேண்டுவோர் பைத்தியக்காரர்களாகப்படுகிறார்கள். அவர் கண்ணும், கருத்தும் அந்த அளவுக்குக் குருடாகியுள்ளது! பரிதாபம், என் செய்வார்!

இலக்கியச்சான்று காட்டி, வரலாற்று மேற்கோள் காட்டி பழக்கவழக்கப் பண்பாடு சிறப்புக்காட்டி நில அமைப்பு பொருளாதார அமைப்பு, சமுதாய அமைப்புக் காரணங்கள் காட்டி திராவிட நாட்டுப் பிரிவினை கோரி நிற்போரைக் கேலி செய்யும் மாதவமேனன்களுக்கும் காமராஜர்களுக்கும், தெளிவு தரட்டும் என்றுகருதி, புதிய பிரிவினைகோரிக்கை ஒன்றைக் காணிக்கையாக வைக்க விரும்புகிறோம்,

கிரேட் பிரிட்டன் மிகச்சிறிய தீவு, அதில் வேல்ஸ் என்பது மிகச்சிறிய பகுதி. ஐம்பது லட்சத்துக்குக் குறைவாகவேதான் அங்கு மக்கள் உள்ளனர்; இதுவரையில் இங்கிலாந்தோடு இணைந்து நின்று வாழ்ந்து வருவதி; ஆங்கில மக்களுக்கும், வேல்ஸ்மக்களுக்கும் அதிக வேறுபாடு ஏதும் கிடையாது. ஒத்திருக்கும் பண்புகளே ஏராளம் நிலைமை அப்படியாக இருந்தும், வேல்ஸ் தனிநாடாகவேண்டும் என்ற கோரிக்கையை, வேல்ஸ் பகுதி மக்களின் மாநாட்டில், வேல்ஸ் மக்கள் தீர்மா...க நிறைவேற்றியுள்ளனர்.

கிரேட் பிரிட்டனின் மிகச்சிறிய தோர் பகுதியாக விளங்கும் வேல்ஸ், சுயாட்சி கேட்கத் துணிவும் திறமையும், அறிவும், ஆற்றலும் கொண்டிருக்கும்போது, அதைவிடப்பன்மடங்கு அளவிலும், உருவிலும், மக்கள் எண்ணிக்கையிலும் பெரிதான திராவிடம், சுயாட்சி கேட்பது எப்படித் தவறாகும்? வேல்ஸ், தான் இணைந்திருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளரிடம் சுயாட்சிப் பிரிவினை கேட்கிறது; நாமும் நமது நாடு இணைந்திருக்கும் இந்தியத் துணைக்கண்ட ஆட்சியாளரிடம் சுயாட்சிப்பிரிவினை கேட்கிறோம். இதைத்தான் கேலிக்குரியதாகக் கருதுகின்றனர் சில குணக்கேடர்கள்! வேல்ஸ் பிரிவினை கோரிக்கை 400 ஆண்டுகளுக்கு முன்பே வந்திருக்கவேண்டிய கோரிக்கை என, லேடி லாயிட் ஜார்ஜ் வற்புறுத்துகிறார்.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் என்ற மூன்று பகுதிகளும் சேர்ந்ததுதான் பிரிட்டன். இப்பொழுது வேல்ஸ் சுயாட்சி கோருகிறது. ஸ்காட்லாந்திற்கும் சுயாட்சி வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தும் இயக்கம், ஸ்காட்லாந்தில் வலுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே பாக்கிஸ்தானோடு தொடர்பு கொண்டிருக்கும் பட்டாணியர்கள் வாழும் பகுதி, பட்டாணிஸ்தானாக மாறவேண்டும், அது தனியரசு நடத்தியாகவேண்டும் என்று கிளர்ச்சி தொடுத்து வருகிறது.

இப்படியாக உலகிலுள்ள ஒவ்வொரு இனமும் தாம் வாழும் வட்டாரத்தைத் தனி அரசு நாடாக ஆக்கிக்கொள்ள, முறை...யோடு, நீதியோடு, நேர்மையோடு போராடுகின்றன. அப்படிப்பட்ட நாடுகளில் தன்மையிலும், தரத்திலும் மிகமிக உயர்ந்து விளங்கும் நாடு, திராவிட நாடாகும்.

வேல்ஸ் சுயாட்சி கோரிக்கையைக் கண்ட பிறகும், திராவிட நாட்டுப்பிரிவினை கோரிக்கையைக் கேலி பேசுவோர் இருப்பார்களானால், அவர்களுக்குக் கண் குருடா? அல்லது கருத்துக் குருடா? என்று ஆராய்ந்து பார்க்க வேண்... அவசியம் ஏற்படுமேயொழி... பிரிவினைப் பிரச்சினையை ...ப்பார்க்க வேண்டி... ...ற்படாது!

சாபு படம் தயாரிக்கிறார்

சிங்கப்பூர், ஜூலை 5—

"எலிபன்ட்பாய்" என்னும் ஆங்கிலப்படத்தின் மூலம் புகழ்பெற்ற, இந்திய நடிகரான தோழர் சாபு, மலேயாவில் மலேயாவின் இயற்கை அமைப்புகளேற்ற ஒரு சினிமா படத்தைத்தயாரிக்கப்போகிறாராம்.

இதற்காக படத்தயாரிப்பாளர், படக்கலை வல்லுநர் ஆகியோருடன், அடுத்த மாத ஆரம்பத்தில் சிங்கப்பூர் வந்து சேர்வார் என்று சொல்லப்படுகிறது.

சாபு தயாரிக்கப்போகும் இப்படத்தில், இரண்டுயானைக் குட்டிகள் முக்கிய பாகம் தாங்கும் பெரிய மலைப்பாம்புகள், மனிதக் குரங்குகள், கரடிகள், மயில்கள் முதலியனவும் இப்படத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்படத் தயாரிப்புவேலையில், மலேயா விலங்கு நூலாராய்ச்சியாளரான தோழர் ஹெர்பட்டி சௌசா, தோழர் சாபுவுக்கு உதவியளிப்பார் என்று சொல்லப்படுகிறது.

முதலில், இப்படத் தயாரிப்பை ஜூலையில் ஆரம்பிப்பது என்று உத்தேசிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது சிங்கப்பூரிலேயே படப்பிடிப்பை ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

டாங்கிகளுக்கு எமன்!

லண்டன், ஜூலை 5—

டாங்கிகளைத்தகர்த்தெறியக் கூடிய நவீன கருவியை, அமெரிக்கப்படைகள் கொரியாவில் எந்த நேரத்திலும் உபயோகிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹான் நதியைக் கடந்த கம்யூனிஸ்டுபடைகள், மூன்று திசைகளில் தெற்கு நோக்கி முன்னேறுவதைத் தடுப்பதே அமெரிக்கப்படைகளின் முதல் வேலையாக இருக்கும். இம்மூன்று படைகளும், முக்கிய நகரமான ஸுவானை நோக்கியே முன்னேறுகின்றன.

சென்னைக்கு 9489 டன் ஆஸ்திரேலிய கோதுமை

சென்னை, ஜூலை 4—

எஸ். எஸ். டைடான்பாங்க் என்ற கப்பல் ஆஸ்திரேலியாவிலிருந்து 9,489 டன் கோதுமையையேற்றிக்கொண்டு சென்னைத் துறைமுகத்திற்கு இன்று வந்து சேர்ந்தது. இந்தக் கப்பலில் வந்துள்ள கோதுமை முழுவதும் இங்கு இறக்கப்பட்டு, சென்னை சர்க்கார்வசம் சேர்ப்பிக்கப்படும்.

இனவட்டார சட்டம் பற்றி 'டெய்லிமெயில்' கருத்து

பிரிடோரியா, ஜூலை 5—

சுதேசி பிரதிநிதித்துவ கௌன்சில்நிறவேற்றுமையை அகற்ற வேண்டும் என்று வெளியிட்ட கோரிக்கையை, இனமண்டல சட்டம் நிறைவேற்றி வைக்கிறது என்று தென்னாப்பிரிக்க பிரதம மந்திரி டாக்டர் மலான் குறிப்பிட்டதைப்பற்றி 'ரான்ட்' டெய்லிமெயில் பின்வருமாறு எழுதியிருக்கிறது:—

"இனமண்டல சட்டத்தினால் இந்தியர்களும், இதர ஆசிய நாட்டினரும் தான் அதிகம்பாதிக்கப்படுகிறார்கள். இந்த சட்டம் சுதேசிகளைப் பாதிக்கவே இல்லை. ஏனெனில், அவர்கள் ஏற்கனவே பேதான் ஒதுக்கப்பட்டுவிட்டனரே"

பர்னாட்ஷா

பிறந்தநாள் செய்தி

லண்டன், ஜூலை 4—

இதுவரையும் பிறந்தநாள் விழாச்செய்திகள் விடுப்பதில் அக்கறை கொள்ளாமலும் அலட்சியப்படுத்தியும் வந்த அறிஞர் பெர்னாட்ஷா, அடுத்த மாதம் வரப்போகும் தனது 94 வது பிறந்தநாள் செய்தியைப் பெரிய அளவில் தயாரித்துவிட்டாராம். அச்செய்தி, அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம். அமெரிக்காவில் இதற்கென ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதாம். பல புகழ்பெற்ற அமெரிக்கர்கள், இச்செய்தியை வெளியிடும் குழுவில் இடம்பெற்றுள்ளனர். பர்னாட்ஷாவின் 94 வது பிறந்தநாட் செய்தியை இவர்களேவெளியிடுவோர்கள் என்று சொல்லப்படுகிறது.

இச்செய்தி மிகவும் முக்கியமான செய்தியென்றும், இதனைத் தயாரிக்க, அறிஞர் ஷா அதிக உழைப்பு எடுத்துக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

விண்ஹோனு மாநாடு ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூலை. 5—

விண்ஹோனு தொழில் அபிவிருத்தி பற்றிய விஷயங்களை விவாதிப்பதற்காக, இந்திய சர்க்காரால் கூட்டப்பட்ட மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

இம்மாநாட்டிற்கு வேண்டிய தகவல்களை வேலையை ஆரம்பித்து விட்டதால், இப்பொழுது சேகரிப்பது சாத்தியமில்லை என்று, சென்னை சர்க்கார் அறிவித்து விட்டதாகத் தெரிகிறது.

இந்திய சர்க்கார் சுகாதார இலாகா அதிகாரி, ஒரு பேட்டியில் கூறுகையில், விண்ஹோனுவிலும் கூட தேவை பூர்த்தி பெறவே சர்க்கார் விரும்புகிறதென்றும் அவசர தேவைக்குக் கூட அயல்நாடுகளை நம்பியிருக்கக் கூடாதென்பதே நோக்கம் என்று கூறினர்.

டோகியோ, ஜூலை 4—

உடனே உதவியனுப்ப முடிவு செய்து உதவிக்கு வந்த ட்ரூமன் பிரஸிடெண்ட் ட்ரூமனுக்கும் அமெரிக்க மக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை தென் கொரியா பார்லிமெண்ட் நிறைவேற்றியிருக்கிறது.

'மக்கள் இலக்கிய' கர்த்தா மாக்ஸிம் கார்க்கி வாழ்க!

சென்னை முற்போக்கு எழுத்தாளர் கூட்டத்தில் பாராட்டு

சென்னை, ஜுலை 3—

சேத்துப்பட்டு மாலை [illegible] சபை ஹாலில், தோழர் [illegible] தலைமையில் மாக்ஸிம் கார்க்கி தினம் கொண்டாடப்பட்டது. தலைவர் பேசுகையில் தன் எழுத்தின் மூலம் பெரும் தொண்டு செய்திருக்கிறார் என்றும் பள்ளிப் படிப்பற்ற கார்க்கியை ஜார் ஆட்சியின் கொடுமை ஓர் உயர்ந்த இலக்கிய கர்த்தாவாக ஆக்கியதே. ரஷியப் புரட்சியின் ஒரு தலைவனாகவும் இருந்து செய்தது என்றும், மனித சமுதாயத்தின்மேல் உள்ள சித்திர நம்பிக்கைதான், கார்க்கியை [illegible] எழுத்தாளனாக மட்டும் இருக்கவிடாமல், பாட்டாளி மக்களின் சார்பிலே நின்று போராடி ரஷிய மக்களின் புதிய வாழ்வைத் தேடித்தர உதவியது என்றும் குறிப்பிட்டார்.

'லோகோபகாரி' ஆசிரியர் தோழர் [illegible] பேசுகையில் "இப்பொழுது வெளிவரும் பெரும்பாலான எழுத்துக்கள் காதல்கதைகளையும், கண்மூடி கற்பனைகளையும் கொண்டு வெளிவருவதைக் கண்டு வருந்துகிறேன், முற்போக்கு வளரவிடாமல் கட்டுப்படுத்தும் சர்க்காரின் போக்கையும் கண்டித்தார்.

அடுத்துப்பேசிய தோழர் [illegible] கார்க்கி, டால்ஸ்டாய், செகோவ் போன்ற எழுத்தாளர்களுக்குச் [illegible] என்றும், டால்ஸ்டாய் [illegible] கருத்தில் [illegible] ஆண்டவனிடம் சக்திக்கு [illegible] கொண்டு எழுதினார். ஆனால், கார்க்கி மனிதனுக்கு [illegible] மனிதன்தான் உழைக்கவேண்டும் — மனிதனுடைய வாழ்வை மனிதன்தான் மாற்றச்செய்ய முடியும் என்று உணர்ச்சி எழுதினார் என்றும், வாழ்க்கையில் உதவாக்கரையாக கருதப்படும், சமூகத்தின் அடிமட்டத்திலே உழலும் மக்களை ஆதாரமாகக்கொண்டு, எழுதப்பெற்றிருக்கின்றன என்றும், அம்மாதிரியான அழுகிப்போன பண்டங்களிலிருந்து ஒரு பெரிய சக்தியைப் [illegible] உண்டாக்கி மக்களுக்கு வழங்கிய [illegible] கார்க்கி, தமது எழுத்தின் மூலமாக சாதித்தார் என்றும் கூறினார்.

தோழர் அ. இளஞ்சேரன் பேசுகையில் "கார்க்கி எழுதியது தோழமையே தவிர, பணக்காரனின் கூலி அல்ல என்றார். பிற்போக்கு [illegible] எழுத்தாளர் கூட்டம் கார்க்கியைப் புகழ்ந்துகொண்டிருப்பதா என்றும், இந்நாள் [illegible] ஆட்சியின் போக்கு முற்போக்கைத் தடைப்படுத்தும் [illegible] கொண்டு விளங்குகிறதேயொழிய மக்களின் வாழ்வைப் [illegible] எந்த காரியமும் செய்யவில்லை என்றும் ஜார் ஆட்சியை எதிர்த்துப் போராடி வெற்றிகண்ட கார்க்கியைப்போல், பல கார்க்கிகள் தேவை என்றும் குறிப்பிட்டார்.

தோழியர் பத்மாவதி பேசுகையில், அன்று மாக்ஸிம் கார்க்கி எதிர்த்துப் போராடியதுபோலவே இன்று நம் அதிகாரத்தையும், அடக்குமுறை ஆட்சியையும் எதிர்த்துப் போராட முற்போக்கு வாதிகள் முன்வர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

கடைசியாக பேசிய தோழர் வி. ராஜகோபாலாச்சாரி "[illegible] பணக்காரனுக்குத்தான் [illegible] வழி என்பதைக் [illegible] அமெரிக்க நாகரிகமென்றும், மனிதனை உருக்கி, தங்கமாக்குவதுதான் அமெரிக்க பொருளாதார போக்கென்றும், [illegible]—அமெரிக்க [illegible] கொண்டதுதான் அமெரிக்க ஜனநாயகம் என்றும், மாக்ஸிம் கார்க்கி அமெரிக்க ஜனநாயகத்தைக் குறித்து கேலி செய்திருப்பதாகக் கூறி [illegible], சமாதானப் [illegible], சோவியத் [illegible] ஆதரவு தரக் கூடாதென்றும் கூறினார்.

[illegible] வழிமேல், [illegible] மாக்ஸிம் கார்க்கி [illegible]. இந்நாடு உருப்படவேண்டுமானால் மாக்ஸிம் கார்க்கி சொன்னபடி 'மூளை விசாரம்' ([illegible] ஒரு சாரரின் வாழ்வுக்காக அறிவைப் பயன்படுத்துவது) செய்யக்கூடாது என்றும் கூறினார்.

'மாக்ஸிம் கார்க்கியைப்போல், முற்போக்கு சக்திகளை [illegible] முற்போக்காளர்கள் [illegible] வேண்டும்'' என்று தோழர் "பொருளாதாரப் [illegible] வாழ்க்கையில் [illegible] இலக்கியகர்த்தாவாகவும், இணைபற்ற [illegible] கார்க்கியின் வரலாற்றைக் குறித்து தோழர் [illegible] பணியும், ஆண்—பெண் இருபாலரும் ஒருமித்து [illegible] போராடவேண்டிய அவசியம் பற்றி தோழியர் [illegible] பேசினார்கள்.

தோழர் மயிலை [illegible] நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

தமிழாசிரியர்கட்கு வேண்டுகோள்

சென்னை ஜுலை 3—

"வரப்போகும் பொதுத் தேர்தலுக்கு ஆசிரியர்களுக்கெல்லாம் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு தமிழாசிரியர்கள் யாவரும் வாக்குரிமை வழங்கும் தகுதியுடையவரானால், தமிழாசிரியர் உரிமையையும், உயர்வையும் காப்பதற்குப் பேருதவியாக இருக்கும். இவ்வரிய வாய்ப்பைத் தவறாமல் பயன் படுத்திக் கொள்ளுமாறு தமிழாசிரியர்கள் யாவரையும் வேண்டுகிறோம்.

வாக்குரிமை வழங்கும் தகுதி பெற விரும்பும் தமிழாசிரியர்கள், அதற்கென உள்ள விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, 10-7-50-க்குள் அந்தந்த மாவட்டக் கலெக்டரிடம் சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பம் வேண்டுவோர் புலவர் மயிலை சிவமுத்து, தமிழாசிரியர் கழகத் தலைவர் 17, இரத்தின முதலி தெரு, சென்னை, என்ற முகவரிக்கு ¼ அணா தபால் தலையுடன் எழுதினால், உடனே அனுப்பிவைக்கப்படும்.

இவ்வரிய வாய்ப்பினை இழந்து விடாதீர்கள்'' என, சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவர் மயிலை சிவமுத்து அறிவிக்கிறார்.

சிங்கப்பூரில் கள்ள கஞ்சா கடைகள்

சிங்கப்பூர், ஜுலை 5—

கள்ளக் கஞ்சா கடைகளை ஒழிக்க எவ்வளவோ முயற்சி செய்தும், இன்னும் [illegible] கடைகள் சிங்கப்பூரில் [illegible] வருகின்றன. சென்ற [illegible] இறுதியில் 1571 [illegible] இருந்தன. அதில் 1[illegible] மூடப்பட்ட[illegible]

இ. மா. மாநாடு வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம்

விருதுநகர், ஜுலை 3—

2-7-50-ல் விருதுநகரில் நடைபெற்ற இராமநாதபுரம் மாவட்ட செயற்குழு கூட்டத்தில், இராமநாதபுரம் மாவட்ட மாநாட்டை, இராமநாதபுரத்தில் நடத்துவதென தீர்மானித்திருக்கிறது.

அதற்கென வரவேற்புக் குழு அமைக்கவும், திறப்பாளர், தலைவர் தேர்ந்தெடுக்கவும் மாவட்டப் பொதுக்குழு அங்கத்தினர் கூட்டம், விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தில் 9-7-50 அன்று நடைபெறும். பொதுக்குழு அங்கத்தினர்கள், இதையே அழைப்பாகக்கொண்டு தவறாது வரக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மு இளஞ்செழியன்

[illegible] உறுப்பினர்

தேனீக்களால் வந்த வம்பு

கேம்பிரிட்ஜ் நீதிபதி தீர்ப்பு

லண்டன், ஜுலை 5—

பக்கத்து வீட்டுக்காரர்வைத்துள்ள தேனீ கூட்டிலிருந்த தேனீக்கள், தன் ஆட்டைக் கொட்டியதால் ஆடு இறந்துவிட்டது என்றும் தேனீக்களை விரட்ட முயன்ற தன் மனைவியைத் தேனீ கொட்டியதினால் காயம் ஏற்பட்டதென்றும் இதற்காக தேனீ வளர்ப்பவர் தனக்கு நஷ்டஈடு தரவேண்டும் என்றும் ஒருவர் கேம்பிரிட்ஜ் கௌண்டி கோர்ட்டில் மனு செய்துகொண்டார்.

நீதிபதி மனுவை விசாரித்து தீர்ப்பு கூறுகையில் தேனீ வளர்ப்பது ஒரு தொழிலாகும் என்றும், சில சந்தர்ப்பங்களில் சேதம் விளைவிக்கக் கூடிய தேனீக்களை ஒருவர் வளர்த்தல் என்பது குற்றமாகாது என்றும் தேனீக்களின் செய்கைக்கு அவைகளை வளர்ப்பவர் ஜவாப்தாரியல்லவென்றும் கூறி மனுவை நிராகரித்துவிட்டார்.

கல்கத்தாவில் பர்மா தேகப்பயிற்சி நிபுணர்

ரங்கூன், ஜுன் 5—

பர்மாவின் பிரபல தேகப்பயிற்சி நிபுணர் யூமாங்மாங்லுவின் என்பவர், இப்பொழுது கல்கத்தா வந்து சேர்ந்திருக்கிறார். ஆசியாவில் எந்த நாட்டைச் சேர்ந்தவர் தேகப் பயிற்சியில் முதல் பரிசு பெறக்கூடியவர் என்பதற்கான ஒரு போட்டியை நடத்த, இவர் ஏற்பாடு செய்து வருகிறார். இந்தியா, பாகிஸ்தான், இலங்கையிடையே எந்த நாட்டினர் கிரிக்கெட் கனத்தைத் தூக்கக்கூடியவர் என்ற போட்டியையும் இவர் நடத்தவிருக்கிறார்.

—ஞேனாப்

தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு ரிமாண்டு

பிரிடோரியா, ஜுலை 5—

கம்யூனிஸ்ட் சட்டம், இனவாரி வெள்ளி சட்டம் இவைகளை மீறி நடந்ததாக வழக்கு தொடரப்பட்ட இரு இந்தியர் மூன்று மாதம் ரிமாண்டில் வைக்க உத்திரவிடப்பட்டனர்.

—ஞேனாப்

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

7 - 7 - 50

உறையூர் :— ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன், எஸ். [illegible] எஸ். மணி, ஜி. பராங்குசம்,

சங்கரநயினார்கோயில் :—சி. பி. சிற்றரசு,

8 - 7 - 50

மார்சிங்பேட்டை :— ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன், எஸ். எஸ். மணி, ஜி. பராங்குசம்.

9 - 7 - 50

பெரியக்கடை வீதி (திருச்சி) :—ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன், எஸ். எஸ். மணி, ஜி. பராங்குசம்.

காங்கயம் :—சி. பி. சிற்றரசு,

பிரிட்டிஷ் சைகிள் உற்பத்தி

பர்மிங்காம், ஜுலை 5—

இந்த மாதம், ஜப்பான் சைகிள்களை மிகக் குறைந்த விலைக்கு விற்க, ஏற்றுமதி செய்வதாக வெளியான ஒரு டோக்கியோ செய்தியைக் குறித்து 'ஹெர்குலிஸ்' சைகிள் கம்பெனி மானேஜிங் டைரக்டர் குனோப்ஸிருபரிடம் கூறிய தாவது:—

இதனால், இந்தியாவிலுள்ள எங்கள் சைகிள் மார்க்கெட் பாதிக்கப்பட்டுவிடாது. பிரிட்டிஷ் சைகிள் தொழில் எப்போதுமே போட்டிகளைச் சமாளித்தே வந்திருக்கிறது.

இந்தியா, சைகிள் உற்பத்திக்கான தொழிற்சாலைகளைத் தன் நாட்டில் ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஜப்பான் சைகிள் இறக்குமதியை இந்தியா அனுமதிக்கும் என்று கூறப்படுகிறது.

அடுத்த வருஷமே இந்தியாவில் இரு தொழிற்சாலைகள், சைகிள் உற்பத்தியில் ஈடுபடவிருக்கிறது. வருஷத்திற்கு ஒரு லக்ஷம் சைகிள்கள் உற்பத்திசெய்யப்படவிருக்கிறது.

பிரிட்டனிலுள்ள ஒரு பிரபல இந்தியவர்த்தக பிரமுகர், இப்போது ஜப்பான் சைகிள்களை இந்தியாவுக்கு அனுப்ப லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை என்று கூறினார்.

ரஷ்யா நடுநிலைமை வகிக்கும்

ஆனால்...?

பாரிஸ், ஜுலை 3—

கொரியா சண்டையில் சோவியத் யூனியன் நடுநிலைமை வகிக்க உத்தேசித்திருப்பதாக [illegible] ரேடியோ அறிவித்ததென்று, பிரெஞ்சு செய்தி ஸ்தாபனம் கெய்ரோவிலிருந்து அறிவிக்கிறது.

அந்த ரேடியோ கூறியிருப்பதாவது:—"ரஷ்யா நடுநிலைமை வகிக்க உத்தேசிக்கிறது. ஆனால், யுத்தவெறியர்கள் தங்கள் பேராசைகளைக் கொரியாவில் நிறைவேற்றிக் கொள்ள அனுமதிக்காது."

கெய்ரோ, ஜுலை 5—

4000 ஆண்டுகளுக்குமுன், எகிப்து மன்னர்களின் கஜானாவை நிரப்பி வந்த தங்க சுரங்கத்தில், இப்பொழுது மீண்டும் வேலை துவக்கப்படவிருக்கிறது.

—ஞேனாப்

'அதிகம் உற்பத்தி செய்'

'ஜெக்'கை மாஸ்கோ நிர்ப்பந்திக்கிறது

லண்டன், ஜுலை 5—

காமின்பார்ம் கொருனாதாக்கிற்கு வேண்டிய உற்பத்தியை ஜெக்கோஸ்லவாகியா செய்ய முடியவில்லை என்றும், இதற்குக் காரணம், ஜெக்கில் தொழிலாளர்களுக்கிடையேயுள்ள அதிருப்தியும், நிர்வாகம் நடத்தும் சர்க்காரிடம் அனுதாபம் இல்லாமையுமே என்று இந்த செய்தி கிடைத்திருக்கிறது.

ஜெக்கோஸ்லாவியா தன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று, கிரெம்ளின் தெரிவித்து வருகிறதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் பாதுகாப்பு முயற்சிகள்

லண்டன், ஜுலை 5—

ஏற்படக்கூடிய எப்பேர்ப்பட்ட நிலைமையைச் சமாளிக்கும்படியான அளவுக்கு அமெரிக்கா பாதுகாப்பு முஸ்தீபுகளைச் செய்து வருவதாக, இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

ஸால்ட்லேக் 'லாகஸ்' என்ற இடத்தில், விமான எதிர்ப்பு பீரங்கிப்படை வைக்கப்பட்டிருக்கின்றன.

மிஸிஸிபி நதியில், மினோஸ்டாவிலிருந்து லெயின் [illegible] ஆயிவரையிலுள்ள எல்லா அணைகளும், 'லாக்ஸ்'களும் பொது மக்கள் உபயோகப்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன.

பனமாகால்வாய் போன்ற முக்ய இடங்களில் படைகள் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. அலாஸ்காவில் ராணுவ குமாஸ்தாக்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

கப்பல்களில் நிறைபதான்[illegible] களை ஏற்றி சீக்கிரமே [illegible] கோடிக்கு அனுப்ப ஏற்பா[illegible] கள் செய்யப்பட்டு வ[illegible] கின்றன.

ஏஜெண்டு தோழர்[illegible]

9-7-50-க்குள் [illegible]

பாக்கியை அனுப்[illegible]

ஏஜெண்டு தோழர்[illegible]

திரிகை அனு[illegible]

உடனே நிறுத்[illegible]

பதைவருத்தத்[illegible]

துக்கொள்ளுகிறே[illegible]

மானேஜர்[illegible]

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

சேலூர்

ஆரணி, ஜூன் 27—

தி. மு. க. சார்பில், சேலூர் ...மன்கோவில் முன்புறமுள்ள திடலில் 23—6—50 மாலை தோழர் ஞட்டி அவர்கள் கொடி யேற்றுவிக்க பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

தோழர் ஓ. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. க. கழகத்தின் இலட்சியத்தைப் பற்றியும், தற்கால நிலைமை என்பதைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர். தோழர் சி. க. ...மன அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிவு பெற்றது.

அபிவிருத்தீஸ்வரம்

கொரடாச்சேரி, ஜூலை 2—

அபிவிருத்தீஸ்வரம் கிராமத்தில் 2—7—50 ஞாயிறு மாலை 6-மணிக்கு, தி. மு. க. துவக்க விழா, தோழர் கி. இருட்டின மூர்த்தி தலைமைதாங்க ஆரம்பமாயிற்று தோழர் கே. கே. நீலமேகம் சொற்பொழிவு ஆற்றினர், கழகக் கொள்கைகளை விளக்கி, தோழர்கள் எஸ்.எம். வந்தினிங்கமும், அல் ஆதியும் பேசினர் தோழர் கட...சனர் நன்றி நவில, கூட்டம் முடிந்தது.

நாமக்கல்

நாமக்கல், ஜூலை 3—

2—7—50 மாலை, தி. மு. கழக துவக்க விழா மிகச் சிறப்புடன் நாமக்கல் பாதையில் கொண்டாடப்பட்டது. தோழர் எம். சுந்தரன் காட்...பன்பாட, தோழர் இரா. ...ருமான் தலைமைவகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின், செயலாளர் தோழர் கா. பெரு...ன் தி. மு. கழகம் தோன்றியதன் அவசியத்தைக் கூறிய ..., தோழர் கோ. துரை ... திருவள்ளுவரின் குறள் ...பற்றி சிறப்பாகப் பேசினர். தோழர் எம். நெடுமாறன் ...கத்தைத் துவக்கி வைத்து, தி. மு. கழக நோக்கங்களையும், ...கள் அதற்கு ஆதரவு தர வேண்டிய அவசியத்தைப் பற்றியும், இந்தி கட்டாய பாடப் பகைவதைக் கண்டித்தும் பேசினர். செயலாளர் ...திகூற, கூட்டம் இனிது முடிந்தது.

சக்கமங்கலம்

ச. மங்கலம், ஜூன் 25—

தி. மு. க. கழகத்தவக்க ..., 12-6-50 மாலை பிள்ளை...க்காலில் அமைக்கப்பட்ட "அழகிரி மேடை" ...சிறப்புற நடைபெற்றது. ...ஐந்து மணிக்கு, கழக ...ழர்கள் ஊர்வலமாக ..., வாழ்த்தொலிகள் ...கொண்டு தெருக்கள் ...த்தோடல்லாமல், ...டவர்கள் வாழும் ... சென்று வர் ... பேசிய பர ... ண்ணியது. ...டைந்ததும், ...ணசாமி ... கூட்டம் ... பாளர்

தோழர் க. முத்தீஸ்வரன் வாழ்த்த அண்ணவரையும் ... வரவேற்றுப்பேசி, புலவர் கோழ சி. இளங்கோவனைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். தோழர் அன்புமுத்து அதை ஆமோதித்தார். தலைவர் முன்னுரையில், நாட்டுப் பிரிவினை, சமுதாயம் ஆகியவற்றை பற்றி விளக்கமாக பேசினர்.

பின்னர், தோழர் சி. பி சிற்றரசு அவர்கள் தி. மு. க கொடியை ஏற்றுவித்து, கடவுளைப்பற்றிக் கழகம் கொண்டிருக்கும் கருத்தென்ன? சமுதாயம், அரசியல், பொருளியல் இலக்கியம் ஆகிய அத்தனையும் ஒன்றோடொன்று சங்கிலித் தொடர்புபோல பின்னிக்கொண்டுவர விரிவுரையாற்றினர். தலைவர் முடிவுரை கூற, செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது

சங்கரன்கோவில்

ச. கோவில், ஜூலை 28—

மருதப்புரத்தில், தி. மு. கழகப் பொதுக் கூட்டம், 25—6—50ல் தோழர் இரெங்கசாமி தலைமையில் கீழ் ஆரம்பமாயிற்று, அதுபோது தோழர்கள் ம அருள்சாமி ஜெயராஜ் க. இராசேந்திரன், டி. ஆர். சுப்ரமணியம் ஆகியோர், இன்றைய சர்க்கார் போக்கையும், வட நாட்டு சுரண்டலையும், மூடப் பழக்க வழக்கங்களைப் பற்றியும், திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்கள் தலைவர் முடிவுரைக்குபின், கூட்டம் இனிது முடிந்தது.

உடுமலை

உடுமலை, ஜூன் 31—

25-6-50 மாலை, தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. சே. சீனுவாசன் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினர். தற்கால அரசியல் நிலைமை குறித்துப் பேசிய பொழுது "இன்றைய நிலையில் இந்திய அரசாங்கம் போகும் போக்கு லூயி காலத்தில் பிரெஞ்சு நாட்டை நினைவூட்டுகிறது. அங்கே ஒழுக்கம் தவறிய லூயி மன்னனுக்கும், பிரதமர் நேருவுக்கும் ஒப்பிட்டு, அந்த நேரத்தில் நாடகம், கலை, இலக்கியத்தில், புரட்சி செய்தவர்களுக்கும், அரசியலில் புரட்சி செய்தவர்களுக்கும்—இங்கு நம் இயக்கத்தவர்களுக்கும் உவமை காட்டி, இன்றைய டாசிசப் போக்கு நீடிக்குமானால் "பிரெஞ்சுப் புரட்சி" இங்கு நடக்க, இன்றைய ஆட்சியாளர் வித்திட்டவர்களாவார்கள் எனக்குறிப்பிட்டு நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர். செயலாளர் தோழர் ஆர். வி. கே. கணேசன் நன்றி கூற, கூட்டம் இனிது முடிவுற்றது.

பூனை கண்ணை மூடிவிட்டால்....!

முன்ஷி கூறுகிறார்

ராஜ்கோட், ஜூலை 3—

அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவிட்டால், தேசம் பல துண்டுகளாகப் பிரிந்து, நமது சுதந்திரம் பறிபோய்விடும் என்று உணவு மந்திரி தோழர் கே. எம். முன்ஷி சௌராஷ்டிர ஆராய்ச்சி சங்கத்தின் ஆதரவில் இன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:— காங்கிரஸில் எதிர்ப்பு சக்திகள் இருக்கலாம். எனினும், இன்றைய காங்கிரஸ் தான் மகாத்மாகாந்தியின் ... நல்ல கட்டுக்கோப்புடன் விளங்குகிறது. கட்டுக்கோப்பான ஸ்தாபனமாக காங்கிரஸ் இருப்பதால்தான், ஆட்சி மாற்றம் சுலபமாக முடிந்தது. இந்தியாவில் இன்று ஸ்திரமான சர்க்கார் இருப்பது சாத்தியமாகி இருக்கிறது மாகாண மந்திர காங்கிரஸ் சர்க்கார்கள், அநேகம் பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியதாக இருந்திருக்கிறது. மொத்தத்தில் பார்த்தால், அவை தீரத்துடன் அவைகளைச் சமாளித்திருக்கின்றன.

சர்க்கரைக்குள் அபினி

ஒரு குமஸ்தா கைது

சென்னை, ஜூலை 4—

நேற்று ஆலந்தூரிலிருந்து ஏலக்டிரிக் வண்டியில் சென்னை கோட்டை ஸ்டேஷன் வந்திறங்கி, தன் ஆபீசுக்குச் சென்றுகொண்டிருந்த வேலாயுதம் என்னும் கம்பெனி குமாஸ்தாவை சட்ட விரோத ... போலீசார் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தனர். அம்மனிதனிடமிருந்த காகிதப்பைச் சர்க்கரைக்குள் 29 தோலா அபினி மறைத்து வைத்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

நட்சத்திரங்களிடையே வேலையில்லா திண்டாட்டம்!

லண்டன், ஜூலை 5—

பிரிட்டிஷ் நடிகர்கள் நடிகைகளிடையே, இம்முறை வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. முன்பு அதிக புகழ்பெற்றிருந்த நட்சத்திரங்களில்பலரும்கூட இப்போது வேலையின்றி சும்மாயிருந்து வருகிறார்கள்.

இரண்டொரு வருஷத்திற்கு முன்பு, இவர்கள் வாரம் 30 பவுன், 40 பவுன் என்றெல்லாம் சம்பளம் வாங்கிவந்தனர். ஆனால் தியேட்டர்களில் கூடும் கூட்டத்திற்கேற்ப ... நடிப்பு தொழிலில் அதிகம் பேர் வந்து விட்டதினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மலேயாவில் பிரிட்டிஷ் விமானங்கள்

லண்டன், ஜூலை 4—

மலேயாவிலும், ஹாங்காங்கிலும் போதிய அளவுக்கு பிரிட்டன், விமானங்களை வைத்திருக்கிறதென்றும், ஜெனரல் மக்ஆர்தர் கோரினால், இவை உடனே கொரியாவில் உதவ அனுப்பப்படும் என்றும் லண்டன் பத்திரிகை செய்தியொன்று கூறுகிறது.

ஆனால், மலேயாவில் அமைதியை நிலைநாட்ட பிரிட்டனுக்குள்ள பொறுப்பை உத்தேசித்து இந்த உதவியை அமெரிக்கர்கள் கேட்கமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக இச்செய்தி கூறுகிறது.

இனி நடப்பவை

✱

சங்கரன்கோவில்:— தி. மு. க. பொதுக்கூட்டம், 7—7—50 இரவு 7—மணி அளவில், திருவேங்கடம் சாலைத்தெரு (வள்ளுவர் திடலில்) தோழர் ச. வே. அ. வள்ளிமுத்து தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் சி. பி சிற்றரசு, மு. அம்பாசாமி ஆகியோர் தற்கால நிலையும், நமது கடமையும் என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

• • •

கலைமம்பூத்தூர் அக்ரஹாரம், பழனி:— 9—7—50 அன்று தி. மு. க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் இல. நடேசசாமி ஏ. வெங்கடாசலம், தி. ஏ. அஜீஸ், அ. தமிழரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

• • •

சைதாப்பேட்டை:— மறுமலர்ச்சி மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 7—7—50 மாலை 6-மணிக்கு சைடாப்ப முதலித் தெரு, நெ. 6, இல்லத்தில் நடைபெறும்.

சமையலறையில் திருடன்

மாம்பலத்தில் துணிகர களவு

சென்னை, ஜூலை 4—

நேற்றிரவு 9-30 மணிக்கு, மேற்கு மாம்பலம் ரங்காரன் தெருவில் வசிக்கும் ஒரு பிராமணர் வீட்டின் சமையலறையில் ஒருவன் நுழைந்து, அங்கிருந்த அமுதவல்லி என்னும் 26 வயது பெண்ணின் பின்புறமாக வெளியே இழுத்துக் கொண்டு போகமுயன்றான். அப்பெண் கூச்சல் போட்டபோது, அவள் கணவன் உதவிக்கு ஓடிவந்தான், வெளியிலிருந்த மற்றொரு திருடன் கல்லால் அடித்து அவனைக் காயப்படுத்தினான். இதற்குள் முதல் திருடன், அமுதவல்லியின் கழுத்திலிருந்த 7½ சவரன் சங்கிலியை அறுத்துக்கொண்டு, இரு திருடர்களும் ஓட்டம் பிடித்தனர். அறுபட்ட சங்கிலியின் துண்டு ஒன்று சமையலறையில் கிடந்ததாம். இது சம்பந்தமாக மாம்பலம் போலீசார் துணிகர கொள்ளையிடப்பட்ட இருவர்மீதும் வழக்கும் பதிவு செய்துகொண்டு, தப்பியோடிய திருடர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

துப்பாக்கியின் துடுக்குத்தனம்!

பம்பாய், ஜூலை 3—

பம்பாய் தாலாவ் பீஸின் பணம் கொடுக்குமிடத்தில், வாசலில் நின்றுகொண்டிருந்த காவலாளியின் கையிலிருந்த துப்பாக்கியின் விசையை எதிர்பாராத விதமாக காவலாளியின் விரல்கள் தட்டிவிட்டதனால், துப்பாக்கி வெடித்து அதிலிருந்த ஒரு ரவை பாய்ந்து உதவி மாகாண போஸ்ட்மாஸ்டர் தோழர் ஏ. ஜி. ஜவந்த் உள்பட ககிருன்ன ஜெனரல் தபால் ஆபீசைச் சேர்ந்த 4 சிப்பந்திகளுக்குக் காயத்தை உண்டு பண்ணிவிட்டது. காயமடைந்தவர்களில் ஒருவர் நிலைமை மோசமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. காவலாளி கைது செய்யப்பட்டிருக்கிறான்.

அமெரிக்க அழகியின் தற்கொலை

ஸான்பிரான்ஸிஸ்கோ, ஜூலை 5—

தான் மன்னர் அமெரிக்க விஜயம் செய்திருந்தபோது, அவரோடு எப்போதும் காணப்பட்ட 22 வயது அழகி குர்ஸ்டேவேன்ஸ், நேற்று அதிக மாத்திரைகள் சாப்பிட்டு தற்கொலை புரிந்துகொண்டாள். ... ஆஸ்பத்திரியில் ... இரண்டு மாத ... ... அவள் ... செய்தி ...

மாடர்ன் தியேட்டர்ஸ்

மந்திரி குமாரி

...சென்னை...

பாரகன் பிராட்வே

தினசரி 3 காட்சிகள்
2-30 • 6 • 9-30 மணி

இரண்டு தியேட்டர்களிலும் தினசரி காலை 9 முதல் 12 மணிவரை முதல் இரண்டு வகுப்புகளுக்கு டிக்கட்டுகளை ரிஸர்வ் செய்து கொள்ளலாம்

மந்திரியார் கார் மீது கல் வீச்சு

வேலையில்லா வேதனையின் விளைவு

பம்பாய், ஜூலை 3—

சர்க்கார் காரியாலயத்துக்கு வந்துகொண்டிருந்த, பம்பாய் விவசாய மந்திரி தோழர் எம். பி. பட்டீல் கார்மீது, வேலையில்லாத வாலிபன் ஒருவன் கல் வீசினான்.

அந்தக்கல், காரின் கண்ணாடி ஜன்னலை உடைத்து, தோழர் பட்டீல் மீது படாமல், அவரது காரியதரிசியின்மேல பட்டது.

கல்லெறிந்த வாலிபனை மந்திரியேபோய்ப் பிடித்துக் கொண்டார். அவன் அஹமதாபாத்தைச் சேர்ந்த ஒரு தையற்காரன் தான் வேலையில்லாமல் திண்டாடுவதாகவும், அதிகாரிகள் கவனத்தைக் கவருவதற்காகவே அவ்வாறு செய்ததாகவும் அவன் போலீசாரிடம் கூறினான்.

புதுச்சேரியில் துப்பாக்கிப் பிரயோகம்

20 பேருக்கு காயம்

புதுச்சேரி, ஜூலை 4—

பாரிசில் உள்ள பிரெஞ்சிந்திய சர்க்கார் உத்தியோகஸ்தரில் ஒருவரான எம். லூபார்ட் சாலனே யின் ரெட்டியார்பாளையம் வீட்டைத் தாக்கிய ஒருகோஷ்டியின் மீது, யாரோ சிலர் சுட்டதன் விளைவாக 20 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் ஒருவர், ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏஜெண்டுகள் தேவை

நமது "மாலைமணி"யை விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட இடங்களுக்கு தேவை.

நாகை,
தஞ்சை.

மானேஜர்:—"மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St. Madras-1